தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 6

ந.க.எண்.028499/எம்/இ1/2017, நாள்.09.06.2017

பொருள்: பள்ளிக் கல்வி – உலக சுகாதார நிறுவனம் – முதியோர்களை பாதுகாக்கும் வகையில் “முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினம்” அனுசரித்து வருதல் – ஜீன் 15 முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினமாக அனுசரித்தல் – மாணவர்களிடையே கூட்டு உறுதி மொழி எடுத்தல் – சார்பு.

பார்வை: 1. அரசு கடித எண்.11329/GL1(2)/2018, நாள்.28.05.2018
2. டாக்டர் V.S நடராஜன் (Geriatric Foundation ) அவர்களின் கடிதம் நாள்.23.05.2018.

******

உலக சுகாதார நிறுவனம் முதியோர்களை போற்றி பாதுகாக்கும் உணர்வினை ஏற்படுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 15ம் தேதியை முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினமாக அனுசரித்து வருகிறது.

மாணவர்கள் முதியோர்கள் மீது அன்பு பாராட்டவும், மரியாதை செலுத்திடவும், அவர்களை போற்றி பாதுகாத்திடும் பண்புகளை மாணவர்களிடம் வளரச் செய்யவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாண்டு ஜீன் 15 அன்று அனைத்து பள்ளிகளலும் நடைபெறும் காலை வணக்கக் கூட்டத்தில் முதியோரை மதிப்போம் என்னும் தலைப்பில் இணைப்பில் கண்டுள்ள உறுதி மொழியினை மாணவ / மாணவியர்கள் ஏற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, அனைத்து ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு சம்மந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தலாகிறது.

இணைப்பு:1 உறுதிமொழி படிவம்

11.6.18

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்



Dr. V.S. NATARAJAN
Geriatric Foundation
encourage • support • achieve

# முதியோரை மதிப்போம்

(டாக்டர் வ.செ. நடராசன் முதியோர் நல அறக்கட்டளையின் நலத்திட்டம்)

## முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினம்

**ஜீன் 15, 2018**

உலக சுகாதார நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 15-ம் தேதியை **முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினமாக** அனுசரித்து வருகிறது. அன்றைய தினம் டாக்டர் வ.செ. நடராசன் முதியோர் நல அறக்கட்டளையின் சார்பாக, சமுதாயத்தில் உள்ள அனைவரையும் ஒருங்கிணைத்து, முதியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை களைய கூட்டு உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி அனுசரிக்கப்பட உள்ளது.

ஜீன் 15, 2018 அன்று காலையில் உங்களது பள்ளி / கல்லூரி / நிறுவனத்தில் அனைவரும் கூட்டாக செய்யும் பிராத்தனையில் (Assembly) கீழ்க்கண்ட உறுதி மொழியினை எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

உறுதி கூறுகிறேன்

## உறுதிமொழி

- "முதியோருக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து வகை கொடுமைகளையும் - இவை வாய்மொழியாகவோ, வன்முறை மூலமாகவோ, பொருளாதார ரீதியாகவோ - எந்த உருவில் வந்தாலும் - அவற்றைக் களைவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்.
- ஒரு முதியவர் கொடுமைப்படுத்த படுவதை முளையிலேயே கண்டுபிடித்துக் தலையிட்டுத் தடுக்கவும், அறவே நீக்கவும், என் சொந்த முயற்சியாலும், தேவைப்பட்டால் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் துணையோடும் பாடுபடுவேன் என உறுதி கூறுகிறேன்.
- மேலும், அவர்களுடைய அனைத்து வகையான தேவைகளுக்கும் - அதாவது உடல் வளத்துக்கும், பாதுகாப்புக்கும், அன்பு மற்றும் மனவளத்துக்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும், அங்கீகாரத்துக்கும் இடையூறு ஏற்பட்டால் அவற்றைத் தடுத்து பாதுகாப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

நீங்கள் உறுதிமொழி எடுப்பதை புகைப்படம் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

*rm@drvsngeriatricfoundation.com*

மேலும் விபரங்களுக்கு : *M.Rajasekaran - 9994902173*


**Dr. V.S. Natarajan Geriatric Foundation**
No.50 (Old No.18A), Flowers Road, Kilpauk, Chennai 600 010 Tamilnadu, India
Telephone: **044-26412030 / 26267282** email : info@drvsngeriatricfoundation.com


**www.drvsngeriatricfoundation.com**